தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2026

**17 வயதுப்பிரிவு**

**(01.01.2009 – 31.12.2010 வரையில் பிறந்தோர்)**

## தமிழீழ விடுதலைப்புலிகள் 50 ஆண்டுகள்

ஈழத்தில் தமிழ்மக்களின் உரிமைகள், மொழி, இன அடையாளங்கள் ஒடுக்கப்பட்டன. இதற்காகத் தமிழ் மக்களால் மேற்கொள்ளப்பட்ட அறவழிப் போராட்டங்கள் நசுக்கப்பட்டன. தமிழ் அரசியல் தலைவர்களுடன் எட்டப்பட்ட உடன்பாடுகள் சிங்கள அரசுகளால் கிழித்து வீசப்பட்டன. அரசயாப்புகள் தமிழ்மக்களை மேலும் அடிமைகளாக்கின.

தமிழர்களின் உயிர்கள் பாதுகாப்பற்றுப்போயின. இந்நேரத்தில்தான் தமிழர்களைப் பாதுகாக்கத் தமிழீழத் தேசியத்தலைவர் தன் தோள்களை உயர்த்தினார். புதிய தமிழ்ப்புலிகள் உருவாகினார்கள். இவர்களால் கரந்தடித் தாக்குதல்கள் ஆங்காங்கே நடத்தப்பட்டன. இத்தாக்குதல்கள் சிங்கள ஆட்சி பீடத்தை நிலைகுலைய வைத்தன. புதிய தமிழ்ப்புலிகள் அமைப்பு 1976 மே ஐந்தாம் நாள் ‘தமிழீழ விடுதலைப் புலிகள்’ என்ற பெயருடன், சீறும் புலிக்கொடியுடன் விடுதலைக்கான பயணத்தைத் தொடர்ந்தது. தமிழர்கள் தலை நிமிர்ந்தோம். தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் தலைமையில் வீரமும் வலிமையும் மிக்க இளைஞர் இணையத் தொடங்கினர்.

சிங்கள அரசால் உருவாக்கப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் எண்ணற்ற தமிழ் இளையோரின் உயிர்களை வதைத்தது. தமிழரது அறிவுப்பெட்டகமான யாழ்நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது. 1983இல் தென்னிலங்கை முழுவதும் திட்டமிட்ட வகையில் தமிழின அழிப்பு நடாத்தப்பட்டது. ‘போரென்றால் போர்’ என்று சிங்கள ஆட்சியாளர் கொக்கரித்தனர்.

தொடர்ந்த தமிழின அழிப்புகள் தமிழ் இளையோரை தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலே அணிதிரளச் செய்தன. ஏராளமான இளையோரின் உறுதுணையோடு தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றிப்பாதையில் வீறுநடை போட்டது. முப்படையோடு கரும்புலிப் படையையும் உருவாக்கிய இனமாகத் தமிழினத்தை உலகுக்கு எடுத்துக்காட்டியவர் எம் தமிழீழத் தேசியத்தலைவர்.

‘அவலத்தைத் தந்தவனுக்கு அதையே திருப்பிக் கொடுப்போம்’ என்று போராடப் புறப்பட்ட ஆண், பெண் போராளிகள் படைத்த வரலாற்று வெற்றிகள் ஈழத்தமிழர்களின் பொற்கால வரலாறாக இருக்கின்றன. வெற்றிகொள்ளப்பட முடியாதென இறுமாந்திருந்த சிங்களப்படைத் தளங்கள் எமது போராளிகளின் பாய்ச்சலில் வீழ்ந்தன. சிங்களக்கடற்படையின் கடலாதிக்கம் கடற்புலிகளாலும் கடற்கரும்புலிகளாலும் தடுக்கப்பட்டது. படையினர் தமிழீழத்தின் எல்லைகளை நெருங்கவிடாது விரட்டப்பட்டனர். அவர்களிடமிருந்து போர்க்கருவிகள் கைப்பற்றப்பட்டன.

எல்லாவற்றுக்கும் மேலாக தமிழீழ நிகழரசு உருவாக்கப்பட்டு தன்னாட்சிக்கான கட்டமைப்புகள் இயங்கின. அரசியல்துறை, மருத்துவத்துறை, காவல்துறை, நீதிநிர்வாகத்துறை, ஊடகத்துறை, தொழில்நுட்பத்துறை உள்ளிட்ட பல்வேறு கட்டமைப்புகள் சிறப்பாகவும் எடுத்துக்காட்டாகவும் இயங்கின. முப்பது ஆண்டுகளில் தமிழீழ மண்மீட்புப்போர் வெற்றியின் விளிம்பில் நின்றது. யாரிடமும் கையேந்தாமல் போரிலும் பொருண்மியத்திலும் தமிழீழம் தலைநிமிர்ந்து நின்றது.

அனைத்துலக நாடுகள் அச்சம் கொண்டன. இந்தியப் பெருங்கடலிலும் ஆசியப் பிராந்தியத்திலும் தமது ஆளுகைக்குத் தமிழீழ விடுதலைப் புலிகளின் எழுச்சியும் தமிழீழ மண்ணின் விடுதலையும் தடையாகும் என தப்புக்கணக்குப் போட்டன. சிங்கள அரசின் தமிழின அழிப்புப் போருக்குக் கைகொடுத்தன. நிமிர்ந்து நின்ற எம் தமிழீழம் எம்மிடமிருந்து பறிக்கப்பட்டது. எமது பெருங்கனவு சிதைக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பேரியக்கம் இவ்வாண்டு ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்திருக்கிறது. இது வெறும் ஆண்டுகளின் எண்ணிக்கையல்ல. தமிழினம் தனியரசை நிறுவுவதற்கு கொடுத்த விலைகளையும் அர்ப்பணிப்புகளையும் புரிந்துகொள்ள வேண்டிய காலம். தமிழீழ விடுதலைக்கான புறநிலைகளை உருவாக்கி வீறுகோண்டு மீண்டெழ வேண்டிய காலம்.

பெருமதிப்புக்குரிய எமது முதல் தலைமுறையினரே! இளந்தலைமுறையினராகிய நாம் உங்கள் வலிகளையும் வடுக்களையும் நன்கு புரிந்துகொண்டுள்ளோம். எமக்கான தீர்வைத் தரவேண்டிய காலம் தள்ளிப்போகலாம். ஆனால், எமது தாயகத்தை நிரந்தரமாக எம்மிடமிருந்து பறித்துவிட முடியாது. வரலாற்றுத் தெளிவும் பன்னாட்டு அரசியல் அறிவும் கொண்ட இளையோர் நாம், தமிழீழத் தேசியத்தலைவரின் வழிநடந்து எமது தாய்நாட்டை மீட்டாள்வோம்.

“தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம்”